1982 பிப்ரவரி 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10–20]

(ஆ) கடன் நிவாரண திருத்தச் சட்ட முன் வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : கடன் நிவாரணச் சட்டம் சம்பந்தமாக ஒரு கிளாரிபிகேஷன். இந்தச் சட்டத்தை யாரும் எதிர்க்கப் போவதில்லை. அனைவரும் ஆதரிக்கக்கூடிய ஒன்று. ஏழைகளுக்குப் பயன்படக்கூடிய சட்டம். இந்தச் சட்டத்தை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை எதிர்ப்பதாக இருந்தால் ஆரம்பத்தில் கருத்துச் சொல்லாமே தவிர, சட்டத்தை ஆதரிப்பதாகக் கூறி இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுவது கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம் : இந்தச் சட்டம் செப்டம்பர் 30 ஆம் தேதி காலாவதியாகிறது. . . . . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்படுகிறது. பிறகு விவாதத்திற்கு வரும்போது விரிவாக இது போன்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்.

திரு. கோ. விஸ்வநாதன் : பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமுன் வடிவை அறிமுகம் செய்யும்போது அறிமுகம் செய்வதையே எதிர்ப்பவர்கள் மட்டுந்தான் ஏதாவது கருத்துக்களைச் சொல்லலாமே தவிர, முழுமையாக ஆதரிக்கக்கூடியவர்கள் அவ்வாறு பேச உரிமையில்லை. தாங்கள் இதிலே முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பில்லில் இருக்கும் கோளாறைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதாவில் இருக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்ட திருத்தங்கள் கொடுத்து வவாதிக்கலாம். அறிமுக நிலையில் பேசுவது கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் இப்போது அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. அறிமுகம் செய்யக்கூடாது என்று சொன்னால் பேசி முடிவு எடுக்கலாம். அலலது விதிப்படி வரவில்லை என்று எடுத்துச் சொல்லலாம். அப்படி அல்லாது கருததுக்களைச் சொல்வதானால் பின்னால் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் துருத்தங்கள் கொண்டுவநது கருத்துக்களைப் பேச, விளக்கத்தைத் தர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அறிமுக நிலையில் பேச வேண்டிய அவசியமில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் ; இந்தச் சட்டம் செப்டம்பர் மாதம் 1981-ல் காலாவதியாகிறது. உடனடியாக ஆர்டினன்ஸ் கொண்டு வந்து கன்டினியூட்டி கொடுத்திருக்கலாம். ஆனால் ஆர்டினன்ஸ் டிசம்பர் மாதம 9 ஆம் தேதி தான் கொண்டு வருகிறார்கள். இரண்டு மாதம் ஒன்பது நாட்கள் இடைவெளி இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்த சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்பார்களேயானால் மைய அரசு எந்த அளவுக்கு இதற்கு காரணமாக இருந்தது என்பதை விளக்கிச் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஆர்டினன்ஸ் போடக் கூடாது என்று யாரும் தடுக்கப்போவதில்லை. செப்டம்பர் மாதம் சட்டம் காலாவதியாகும்போதே போட்டிருக்கலாம். அப்படிப் போடாததால் இந்தச் சட்டம் காலாவதியான காலத்தில் பான் புரோக்கர்ஸ், மணிலென்டர்ஸ் இருக்கிற பாண்டுகளை வேலிட் ஆக்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்தின்போது எடுத்துக்கொள்ள வேண்டியவைகள் இவை. மாநில அரசைப் பொறுத்தவரையில்—நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்—ஏழைகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற நன்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டு தொடர்ந்து இதற்கு நீட்டிப்புத் தரவேண்டுமென்று, பட்டிதொட்டிகளிலே எல்லாம் இந்தச் சட்டத்தினுடைய பலன் சென்றடைவதற்காக இன்னும் இதற்கு நீடடிப்புக் கொடுக்க வேண்டுமென்று நோக்கத்தோடு மாநில அரசே இதைக் கொண்டுவந்திருக்கிறது.

1982 பிப்ரவரி 5] [திரு. சி. பொன்னையன்]

ஆர்டின்ன்ஸ் என்பதைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டுமெனபது மாண்பமிகு உறுப்பினர் அவாகளுக்கு தெரியாமல் இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு 3, 4 மாதங்கள் அது வைதது விட்டால் அதற்காக மாண்பமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசைக் சாடுகிறார்கள் என்றே நான் நினைக்கிறேன. அந்த விவாதத்தின்போது நீங்கள் சாடலாம்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, விதி 124 தெளிவாகச் சொல்கிறது. மாண்டமிகு அமைச்சர் பெருமக்கள் இந்த மாமன்றத்திலே பல்வேறு விதமான சட்ட முன்வடிவுகளை எல்லாம் அறிமுகம் செய்ய இருக்கிறார்கள். அதற்கு முன்பாக தவறான முன்மாதிரியாக இது வந்து விடக்கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன். விதி 124 இல்-

[i] If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thanks fi., a briet statement from the menber who movies and from a member who opposes the motion, may without further debate, put the question thereon.

[ii] It such a motion is agreed to, the Bill may be introduced.

என்று தெளிவாக இருக்கிறது. நம்முடைய உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் இதிலே ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்பியிருக்கிறாாகள். இரணடு மாத இடைவெளியில் எந்தவிதமான சட்டமும் இதைப் பொறுத்தவரையில் கிடையாது. சட்டமே இல்லாத நிலையில் இடைவெளி ஏற்பட்டு இருக்கிறது. எனவே இன்ட்ரடியுஸ் பண்ணுவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுபபினர் திரு பொன்னுரங்கம் மசோதாவை ஆதரித்து இருக்கிறார். ஆகவே இப்போது அது வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: நோக்கத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். டெக்னிக்காலிட்டிஸ் வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டெக்னிக்காலிட்டிஸ் பற்றி மசோதா வரும்பொழுதுதான் பேச முடியும் இப்போது பேசமுடியாது.

பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5, ஒழுங்குப் பிரச்சினை.

ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது மற்ற அறிவிப்பு. களையும் எடுத்துக் கொள்வது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறேன். விதி 54 இன் கீழ் சில கவன ஈர்ப்பு நோட்டீஸ்கள் கொடுத்தேன். அவைகளுக்கு எல்லாம் தாங்கள் அனுமதி மறுத்து எனக்கு அனுப்பி இருக்கிறீர்கள். அதை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று விதியிலே இல்லை. நம்முடைய விதி 13 இல்

Sub-Rule 3-இல்

The discussion on the address may be interrupted in the Course of a sitting by an adjournment motion under Rule 55.

என்று இருக்கிறது. சபையை ஒத்திவைக்கக் கோரும் அட்ஜர்ன் மென்ட் மோஷனை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கவன ஈர்ப்பை எடுக்க வேண்டாம் என்றால் எப்படிச் சரியாகும்?

இன்றைக்கு நாட்டிலே எவ்வளவோ நாலாவிதமான செய்திகள் நடக்கின்றன. எல்லாவற்றையும் நீங்கள் கொடுக்கிற 10 நிமிடத்திற்குள்ளே நாங்கள் பேசி முடித்துவிட முடியாது. அப்படி எடுக்கக்கூடாது என்று இருந்தால் இந்த விதியை நீங்கள் இங்கே போட்டிருக்க வேண்டாம். கவர்னர்ஸ் அட்ரஸ் இருக்கிறபோது வேறு எதையுமே எடுக்கக் கூடாது என்று இதிலே சொல்லியிருக்கிறீர்கள். சபையிலே வேறு எதையுமே எடுத்துக்கொள்ள மாட்டீர்களா? இல்லை, எதையாவது எடுப்போம் என்று சொல்கிறீர்களா ? இல்லை. இதை மாத்திரம் எடுக்கமாட்டேன் என்று சொல்கிறீர்களா? அப்படி எடுக்கக்கூடாது என்று முடிவு எடுத்தால் இந்த விதியை நீங்கள் திருத்தியிருக்கவேண்டும் சட்டமும் இருக்கும், எடுக்கவும்